**Case No. STC. No.64/2025, Dated: 25.03.2026**

**PW-5- சந்திரன் த/பெ பழனிசாமி (CMP.No.721/2025-ன் படி மனு அனுமதியின் பெயரில் குறுக்கு விசாரணை)**

**(சத்தியபிரமாணம் திரு. E. கோவிந்தராசு, இருக்கை எழுத்தர் நிலை-3 அவர்களால் செய்யப்பட்டது).**

**(விசாரணை தொடங்கப்பட்ட நேரம் 12.18 A.M):-**

**எதிர் ஆஜர்**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

1. அ.சா.1 எனது உறவினரா என்றால், அவர் எனது அண்ணன் உறவு ஆவார். அ.சா.3 எனது உறவினரா என்றால், எனது மாமா உறவுமுறை ஆவார். அ.சா.1 புகார் கொடுக்க சென்றபோது நானும் காவல்நிலையத்திற்கு சென்றேனா என்றால், இல்லை. போலீசார் என்னை விசாரித்தனரா என்றால், விசாரித்தனர். எங்கு வைத்து விசாரித்தனர் என்றால், எனது ஊரில் வைத்து விசாரித்தனர். எத்தனை மணிக்கு விசாரித்தனர் என்றால், காலை 11.00 மணிக்கு விசாரித்தனர். அதன்பின்பு போலீசார் என்னை விசாரித்தனர் என்றும், கையெழுத்து செய்திருந்தேன் என்றும் சொன்னால் தவறு என்றால், சரிதான். நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று படித்து பார்த்தேனா என்றால், இல்லை. எத்தனை கையெழுத்து செய்தேன் என்றால், ஒரே கையெழுத்து மட்டும் செய்தேன். வேறு யாரும் கையெழுத்து செய்தார்களா என்றால், நான் மட்டும் தான் கையெழுத்து செய்தேன். நான் காவல்நிலையத்தில் வைத்துதான் கையெழுத்து செய்தேன் என்று சொன்னால், சரியல்ல. சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் போலீசார் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றும்,

என்னிடம் கையெழுத்து பெறவில்லை என்றும், வழக்கிற்காக போலீசார் கையெழுத்து பெற்றதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)**

**<u>(விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 12.23 A.M):–</u>**

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/-.R.Elanchezhian,
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.